# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2123/69 - 2019 මැයි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.16

*2123/69 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

பிரிவு 4(2) இன் படியான பிரசுரித்தல்

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள LKAS 1 *நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தலின் திருத்தங்கள் மற்றும் LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் திருத்தங்கள்* 01 சனவரி 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளது. இந்த சீராக்கமானது இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் முதலாவது நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளை உள்ளடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வரும்.

பேரவையின் கட்டளைப்படி,

பிரசன்ன லியனகே,
செயலாளர்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,
இல. 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2019, மே 16.

# பொருண்மையின் வரைவிலக்கணம்

## LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்

## LKAS 1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தலின் திருத்தங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச்சட்டகத்தின் 2018 இன் மேம்படுத்தல்களின் குறிப்புகளை ஏற்றுக்கொள்ளாத ஒரு உரிமத்திற்காக, பந்தி 7 திருத்தப்பட்டுள்ளது. மற்றும் பந்தி 139T சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

## வரைவிலக்கணங்கள்

7 …

*பொருண்மை:*

~~**உருப்படிகளின் தவறுகை அல்லது அவற்றினை தவறாக குறிப்பிடுதல் பொருண்மையான தொன்றாவது அவை, தனித்தோ அல்லது ஒருமித்தோ பாவனையாளர்களினால் நிதிக்கூற்று அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கும் போதாகும். பொருண்மையானது சூழவுள்ள சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் தவறுகை அல்லது பிரழ் கூற்றுக்களின் அளவு, தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது. உருப்படியின் அளவு அல்லது தன்மை இவையிரண்டும் சேர்வை தீர்மானிக்கும் காரணிகளாக அமையக்கூடும்.**~~

<u>**தகவலானது அதன், தவறுகை, அவற்றை தவறாக அல்லது மறைமுகமாக குறிப்பிடுதல் குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்களின் பொதுப்பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளின் மீது தகவல்களை வழங்கும் முதன்மை பயனாளர்களால், அதன் நிதியறிக்கைகளின் மீது எடுக்கப்படும் தீர்மானங்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தவதை, விளக்காததாக அமையும் பொழுது, பொருண்மையானதாக கருதப்படும்.**</u>

<u>பொருண்மையானது, தகவல்களின் தன்மை அல்லது அதன் பரிமானத்தில் மீது அல்லது இவை இரண்டின் மீதும் தங்கியுள்ளது. உரிமமானது, தகவல்கள் தனியாகவோ அல்லது மற்றைய தகவல்களுடன் இணையும்பொழுது அதன் நிதியறிக்கைகளை அதன் அமைப்புக்களுடன் முழுமையாக கருதும்பொழுது பொருண்மை உடையதா என்பதை மதிப்பிடுகிறது.</u>

<u>தகவல்கள் ஆனது மறைக்கப்பட்டிருக்கும் வகையில் வெளிப்படுத்தல் ஆனது, தகவல்கள் நிதியறிக்கைகளில் அதன் தவறுகை அல்லது தவறாக குறிப்பிடப்படல் பொழுது அதன் முதனிலை பயனாளர்களுக்கு ஏற்படுத்துவது போன்றதான விளைவை, ஏற்படுத்தும்.</u>

<u>கீழ்வருவன, பொருண்மையான தகவல்களானது மறைக்கப்பட்டிருப்பதன் விளைவால் ஏற்படுத்தப்படுத்தும் சூழ்நிலைகளுக்கான உதாரணங்கள் ஆகும்.</u>

a) <u>நிதியறிக்கைகளில், பொருண்மையான உருப்படிகள், ஊடுசெயல்கள் அல்லது மற்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆனால், பயன்படுத்தப்பட்ட மொழியானது துல்லியமற்றதாக அல்லது தெளிவற்றதாக அமையும்பொழுது.</u>

b) <u>பொருண்மையான உருப்படிகள், ஊடுசெயல்கள், அல்லது மற்றைய நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்கள் ஆனது நிதியறிக்கைகள் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருத்தல்.</u>

c) <u>வெவ்வேறான உருப்படிகள், ஊடுசெயல்கள் அல்லது மற்றைய நிகழ்வுகளாவன பொருத்தமற்ற வகையில் தொகுக்கப்பட்டிருத்தல்.</u>

d) ஒத்த உருப்படிகள், ஊடுசெயல்கள், அல்லது மற்றைய நிகழ்வுகளாவன பொருத்தமற்ற வகையில் வேறாக்கப்பட்டிருத்தல் மற்றும்,

e) முதனிலை பயனாளர்களால், எந்த தகவல் பொருண்மையானது என்று தீர்மானிக்க முடியாத அளவிற்கு, பொருண்மையான தகவல்கள் பொருண்மையற்ற தகவல் மறைக்கப்படும்பொழுது நிதியறிக்கைகளின் புரிந்துகொள்ளக்கூடிய தன்மை குறைக்கப்படும்.

முதனிலை பயனாளர்களால், குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்களின் பொதுவான பயன்பாட்டிற்கான நிதியறிக்கைளின்மீது நியாயமான முறையில் எதிர்பார்க்கபடும் முதனிலை பயனர்களால் மேற்கொள்ளப்படும் ~~பொருளாதா~~ர தீர்மானங்களின்மீது செல்வாக்கு செலுத்தும் தகவல்கள், தவறுகை ~~அல்லது தவறாக குறிப்பிடுதலை~~ மதிப்பிடல், ~~மற்றும் பொருண்மையானது,~~ ஒரு உரிமமானது, உரிமத்தின் சொந்த சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளும்பொழுது அந்த பயனர்களின் பண்புகளையும் கவனத்திற் கொள்ளுதல் தேவைப்படுத்தப்படுகிறது.

பல நிகழ்கால மற்றும் எதிர்கால முதலீட்டாளர்கள், பற்றாளர்கள் மற்றும் மற்றைய, கடன்கொடுநர்கள் அறிக்கையிடும் உரிமங்களால் தகவல்களை நேரடியாக அவர்களுக்கு வழங்குவதற்கு வேண்டியிருக்க முடியாது மற்றும் அவர்களுக்கு தேவையான அதிகமான நிதி தகவல்களிற்கு பொதுப் பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளின் மீது தங்கியிருக்க வேண்டும். இதன் விளைவாக, பொதுப் பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளில் முதனிலை பயனர்களான அவர்களுக்கு நிதியறிக்கைகள் திசைப்படுத்தப்படும். நிதியறிக்கைகள், வணிக மற்றும் பொருளியல் செயற்பாடுகள் மீது நியாயமான அறிவுடைய மற்றும் தகவல்களை விடாமுயற்சியுடன் மதிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்யும் பயனாளர்களுக்கு தயாரிக்கப்படுகிறது. சில நேரங்களில் நன்கு தகவலறிந்த மற்றும் தனிச்சிறப்புடைய ஊக்கமுடைய பயனாளர்களிற்கு கூட, சிக்கலான பொருளியல் சம்பவங்களின் தகவல்களை புரிந்துகொள்வதற்கு ஆலோசகர்களின் உதவி தேவைப்படக்கூடும்.

~~நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச்சட்டகத்தின் பந்தி 25ஆனது, பயனாளர்கள் வணிக மற்றும் பொருளியல் செயற்பாடுகளில் மீது நியாயமான அறிவை கொண்டிருப்பதாகவும் மற்றும், நியாயமான விடாமுயற்சியுடன் தகவல்களை ஆய்வு செய்ய விருப்பம் உடையவர்களாகவும் கருதப்படுகிறது. ஆதலால் மதிப்பீடு ஆனது, எவ்வாறு அத்தகைய பண்புகளை கொண்ட பயனர்கள் பொருளியல் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எவ்வாறு நியாயமான முறையில் பாதிக்கப்படலாம் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும்.~~

…

## நடைமுறைப்படுத்திய திகதி

139T பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்தி 5 திருத்தியுள்ளது. LKAS 8 இன் பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது.உரிமமொன்று எந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

2018இன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் வேலைச்சட்டகத்தில் (SLFRS இன்) குறிப்புகளின் மேம்படுத்தல்களை ஏற்றுக் கொண்ட உரிமம் ஒன்றிற்காக பந்தி 7 மேம்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் பந்தி 139T சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் அடிக்கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கிய உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

# வரைவிலக்கணங்கள்

**7. …**

*பொருண்மை:*

~~**உருப்படிகளின் தவறுகை அல்லது அவற்றினை தவறாக குறிப்பிடுதல் பொருண்மையான தொன்றாவது அவை, தனித்தோ அல்லது ஒருமித்தோ பாவனையாளர்களினால் நிதிக்கூற்று அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக இருக்கும் போதாகும்.பொருண்மையானது சூழவுள்ள சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் தவறுகை அல்லது புரள் கூற்றுக்களில் அளவு, தன்மை என்பனவற்றில் தங்கியுள்ளது. உருப்படிகளின் அளவு அல்லது தன்மை அல்லது இவையிரண்டினதும் சேர்க்கையை தீர்மானிக்கும் காரணிகளாக அமையக்கூடும்.**~~

**தகவல்களின் பொருண்மையானது அதன் தவறுகை, தவறாக குறிப்பிடுதல் அல்லது மறைத்தல், குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்கள் நிதி தகவல்களை வழக்கும் பொதுவான பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளின் முதனிலை பயனர்கள், அந்த நிதியறிக்கைகளின் மீதான மேற்கொள்ளும் தீர்மானங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.**

பொருண்மையானது தகவல்களின் தன்மை அல்லது அளவில் அல்லது அவையிரண்டிலும் தங்கியுள்ளது . உரிமமானது தகவல்களை தனித்தோ அல்லது மற்றைய தகவல்களின் சேர்வையாகவோ அதன் நிதியறிக்கைகளை முழுமையாக கருதும்பொழுது பொருண்மையுள்ளதா என மதிப்பிடுகிறது.

தகவல்கள் ஆனது மறைக்கப்பட்டிருக்கும் வகையில் வெளிப்படுத்தல் ஆனது, தகவல்கள் நிதியறிக்கைகளில் அதன் தவறுகை அல்லது தவறாக குறிப்பிடப்படல் பொழுது அதன் முதனிலை பயனாளர்களுக்கு ஏற்படுத்துவது போன்றதான விளைவை ஏற்படுத்தும்.

கீழ்வருவன, பொருண்மையான தகவல்களானது மறைக்கப்பட்டிருப்பதன் விளைவால் ஏற்படுத்தப்படுத்தும் சூழ்நிலைகளுக்கான உதாரணங்கள் ஆகும்.

(a) நிதியறிக்கைகளில், பொருண்மையான உருப்படிகள், ஊடுசெயல்கள் அல்லது மற்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆனால், பயன்படுத்தப்பட்ட மொழியானது துல்லியமற்றதாக அல்லது தெளிவற்றதாக அமையும்பொழுது.

(b) பொருண்மையான உருப்படிகள், ஊடுசெயல்கள், அல்லது மற்றைய நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்கள் ஆனது நிதியறிக்கைகள் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருத்தல்.

(c) வெவ்வேறான உருப்படிகள், ஊடுசெயல்கள் அல்லது மற்றைய நிகழ்வுகளாவன பொருத்தமற்ற வகையில் தொகுக்கப்பட்டிருத்தல்.

(d) ஒத்த உருப்படிகள், ஊடுசெயல்கள், அல்லது மற்றைய நிகழ்வுகளாவன பொருத்தமற்ற வகையில் வேறாக்கப்பட்டிருத்தல் மற்றும்,

(e) முதனிலை பயனாளர்களால், எந்த தகவல் பொருண்மையானது என்று தீர்மானிக்க முடியாத அளவிற்கு, பொருண்மையான தகவல்கள் பொருண்மையற்ற தகவல் மறைக்கப்படும்பொழுது நிதியறிக்கைகளின் புரிந்துகொள்ளக்கூடிய தன்மை குறைக்கப்படும்.

முதனிலை பயனாளர்களால், குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்களின் பொதுவான பயன்பாட்டிற்கான நிதியறிக்கைளின்மீது நியாயமான முறையில் எதிர்பார்க்கபடும் முதனிலை பயனர்களால் மேற்கொள்ளப்படும் ~~பொருளாதார~~ தீர்மானங்களின்மீது செல்வாக்கு செலுத்தும் தகவல்கள், தவறுகை ~~அல்லது தவறாக குறிப்பிடுதலை~~ மதிப்பிடல், ~~மற்றும் பொருண்மையானது,~~ ஒரு உரிமமானது, உரிமத்தின் சொந்த சூழ்நிலைகளையும் கவனத்தில் கொள்ளும்பொழுது அந்த பயனர்களின் பண்புகளையும் கவனத்திற்கொள்ளுதல் தேவைப்படுத்தப்படுகிறது. ~~பயனாளர்கள் வணிக மற்றும் பொருளியல் செயற்பாடுகளில் மீது நியாயமான அறிவை கொண்டிருப்பதாகவும் மற்றும், நியாயமான விடாமுயற்சியுடன் தகவல்களை ஆய்வு செய்ய விருப்பம் உடையவர்களாகவும் கருதப்படுகிறது. ஆதலால் மதிப்பீடு ஆனது, எவ்வாறு அத்தகைய பண்புகளை கொண்ட பயனர்கள் பொருளியல் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது எவ்வாறு நியாயமான முறையில் பாதிக்கப்படலாம் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும்~~.

பல நிகழ்கால மற்றும் எதிர்கால முதலீட்டாளர்கள், பற்றாளர்கள் மற்றும் மற்றைய, கடன்கொடுநர்கள் அறிக்கையிடும் உரிமங்களால் தகவல்களை நேரடியாக அவர்களுக்கு வழங்குவதற்கு வேண்டியிருக்க முடியாது மற்றும் அவர்களுக்கு தேவையான அதிகமான நிதி தகவல்களிற்கு பொதுப்பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளின் மீது தங்கியிருக்க வேண்டும். இதன் விளைவாக, பொதுப்பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளில் முதனிலை பயனர்களான அவர்களுக்கு நிதியறிக்கைகள் திசைப்படுத்தப்படும். நிதியறிக்கைகள், வணிக மற்றும் பொருளியல் செயற்பாடுகள் மீது நியாயமான அறிவுடைய மற்றும் தகவல்களை விடாமுயற்சியுடன் மதிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்யும் பயனாளர்களுக்கு தயாரிக்கப்படுகிறது. சில நேரங்களில் நன்கு தகவலறிந்த மற்றும் தனிச்சிறப்புடைய ஊக்கமுடைய பயனாளர்களிற்கு கூட, சிக்கலான பொருளியல் சம்பவங்களின் தகவல்களை புரிந்துகொள்வதற்கு ஆலோசகர்களின் உதவி தேவைப்படக்கூடும்.

…

## நடைமுணக்கு வரும் திகதி

…

139T பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்தி 5 திருத்தியுள்ளது. LKAS 8 இன் பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது.உரிமமொன்று எந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

## LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் திருத்தங்கள்

நிறுவக சபையானது, இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRSs) நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகத்தின் திருத்தங்களின் குறிப்புகளின் மேம்படுத்தல்களின் ஏற்புகளிற்கு சுயாதீனமான வகையில், LKAS8 இன் முன்னைய பிரயோகத்தை அனுமதிப்பதற்காக இரண்டு வகையான திருத்தங்களிற்கு குறிப்புகளை வழங்குகிறது,

| |
|---|
| இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நிதியறிக்கையிடலுக்கான கோட்பாட்டு வேலைச்சட்டகத்தின் 2018 இன் மேம்படுத்தல்களின் குறிப்புகளை ஏற்றுக்கொள்ளாத உரிமத்திற்காக, பந்தி 5 திருத்தப்பட்டுள்ளது. பந்தி6 நீக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் பந்தி 54H சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது. |

## வரைவிலக்கணங்கள்

5 …

**பொருண்மையானது ~~உருப்படிகளின் தவறுகை அல்லது அவற்றினை தவறாக குறிப்பிடுதல் பொருண்மையான தொன்றாவது அவை, தனித்தோ அல்லது ஒருமித்தோ பாவனையாளர்களினால் நிதிக்கூற்று அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக இருக்கும் போதாகும்.பொருண்மையானது சூழவுள்ள சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் தவறுகை அல்லது புரள் கூற்றுக்களில் அளவு, தன்மை என்பனவற்றில் தங்கியுள்ளது. உருப்படிகளின் அளவு அல்லது தன்மை அல்லது இவையிரண்டினதும் சேர்க்கையை தீர்மானிக்கும் காரணிகளாக அமையக்கூடும்~~. LKAS1 இன் பந்தி 7 இல் விவரிக்கப்படுவதுடன் இந்த நியமத்தில் அதை ஒத்த அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகிறது.**

….

6 ~~முதனிலை பயனாளர்களால், குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்களின் பொதுவான பயன்பாட்டிற்கான நிதிறிக்களில்மீது நியாயமான முறையில் எதிர்பார்க்கபடுவதன் மீது எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் செல்வாக்கு செலுத்தும் தகவல்கள், தவறுகை அல்லது தவறாக குறிப்பிடுதலை மதிப்பிடல், மற்றும் பொருண்மையானது, உரிமத்தின் சொந்த சூழ்நிலைகளை கவனத்தில் கொள்ளும்பொழுது அதன் பயனாளர்களால், அதன் பண்புகளின் கவனத்திற்கொள்ள உரிமத்தால் தேவைப்படுகிறது.~~ (நீக்கப்பட்டுள்ளது)

…

## நடைமுறைக்கு வரும் திகதி

….

54H <u>பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்தி 5 திருத்தியுள்ளது. LKAS 8 இன் பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது.உரிமமொன்று அந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.</u>

2018 இன் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் வேலைச்சட்டகத்தில் (SLFRS இன்) குறிப்புகளின் மேம்படுத்தல்களை <u>ஏற்றுக் கொண்ட</u> உரிமம் ஒன்றிற்காக பந்தி 5 மேம்படுத்தப்பட்டுள்ளது. பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது மற்றும் பந்தி 54H சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் அடிக்கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கிய உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

## வரைவிலக்கணங்கள்

5 …

பொருண்மையானது ~~உருப்படிகளின் தவறுகை அல்லது அவற்றினை தவறாக குறிப்பிடுதல் பொருண்மையான தொன்றாவது அவை, தனித்தோ அல்லது ஒருமித்தோ பாவனையாளர்களினால் நிதிக்கூற்று அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக் கூடியதாக இருக்கும் போதாகும்.பொருண்மையானது சூழவுள்ள சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படும் தவறுகை அல்லது புரள் கூற்றுக்களில் அளவு, தன்மை என்பனவற்றில் தங்கியுள்ளது. உருப்படிகளின் அளவு அல்லது தன்மை அல்லது இவையிரண்டினதும் சேர்க்கையை தீர்மானிக்கும் காரணிகளாக அமையக்கூடும்.~~ LKAS1 இன் பந்தி 7 இல் விவரிக்கப்படுவதுடன் இந்த நியமத்தில் அதை ஒத்த அர்த்தத்துடன் பயன்படுத்தப்படுகிறது.

….

6 ~~முதனிலை பயனாளர்களால், குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்களின் பொதுவான பயன்பாட்டிற்கான நிதிறிக்களில்மீது நியாயமான முறையில் எதிர்பார்க்கபடுவதன் மீது எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் செல்வாக்கு செலுத்தும் தகவல்கள், தவறுகை அல்லது தவறாக குறிப்பிடுதலை மதிப்பிடல், மற்றும் பொருண்மையானது, உரிமத்தின் சொந்த சூழ்நிலைகளை கவனத்தில் கொள்ளும்பொழுது அதன் பயனாளர்களால், அதன் பண்புகளின் கவனத்திற்கொள்ள உரிமத்தால் தேவைப்படுகிறது.~~ <u>(நீக்கப்பட்டுள்ளது)</u>

…

## நடைமுறைக்கு வரும் திகதி

…

54H பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்தி 5 திருத்தியுள்ளது. LKAS 8 இன் பந்தி 6 நீக்கப்பட்டுள்ளது.உரிமமொன்று அந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும்.

## மற்றைய இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கான திருத்தங்கள்

## 2011 இன் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச்சட்டகத்திற்கான திருத்தங்கள்

*கீழ்வரும் திருத்தங்கள் LKAS 1 மற்றும் LKAS 8 இல் குறிப்பிட்ட பொருண்மையின் வரைவிலக்கணத்தின் திருத்தங்களின் தொடர்ச்சியாகும்.இந்த திருத்தங்கள் எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படும் அதே வேளையில், உரிமமொன்று LKAS 8 மற்றும் LKAS 1 இன் குறிப்பிட்ட பொருண்மையின் வரைவிலக்கணத்திற்கான திருத்தங்களை பிரயோகிக்கும்.*

| |
|---|
| பந்தி QC11 திருத்தப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது. |

*பொருண்மை*

QC11 உருப்படிகளின் தவறுகை ~~அவற்றினை~~ அல்லது தவறாக குறிப்பிடுதல் அல்லது மறைத்தல் பொருண்மையான தொன்றாவது அவை, முதனிலை பாவனையாளர்களினால் பொதுவான பயன்பாட்டிற்கான நிதிக்கூற்று அடிப்படையில் (பந்தி OB5 ஐ பார்க்கவும் ) மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் நியாயமான முறையில் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கும் போதாகும், அவை குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்கள் பற்றிய நிதி தகவல்களை வழங்குகின்றது. வேறு விதமாக கூறுவதாயின், பொருண்மையானது, ஒரு தனிப்பட்ட உரிமத்தின் நிதியறிக்கையின் சூழலுடன் தொடர்புடைய தகவல்களுடனான உருப்படிகளின் தன்மை அல்லது பரப்பு, அல்லது இவையிரண்டையும் அடிப்படையாக கொண்ட உரிமம் சார்ந்த தோற்றமாகும்.

இதன் விளைவாக, சபையினால் பொருண்மைக்கு ஒரு சீரான அளவுடைய தொடக்க நிலையை குறிப்பிட முடியாது. அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எது பொருண்மையானதாக அமையக்கூடும் என்பதை முன்னரே தீர்மானிக்க முடியாது.

## 2018 இன் நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தலுக்கான வேலைச்சட்டகத்திற்கான திருத்தங்கள்

*கீழ்வரும் திருத்தங்கள் LKAS 1 மற்றும் LKAS 8 இல் குறிப்பிட்ட பொருண்மையின் வரைவிலக்கணத்தின் திருத்தங்களின் தொடர்ச்சியாகும்.இந்த திருத்தங்கள் எதிர்காலத்தில் பிரயோகிக்கப்படும் அதே வேளையில், உரிமமொன்று LKAS 8 மற்றும் LKAS 1 இன் குறிப்பிட்ட பொருண்மையின் வரைவிலக்கணத்திற்கான திருத்தங்களை பிரயோகிக்கும்.*

| |
|---|
| பந்தி 2.11 திருத்தப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது. |

*பொருண்மை*

2.11 உருப்படிகளின் தவறுகை அவற்றினை அல்லது தவறாக குறிப்பிடுதல் அல்லது மறைத்தல் பொருண்மையான தொன்றாவது அவை, முதனிலை பாவனையாளர்களினால் பொதுவான பயன்பாட்டிற்கான நிதிக்கூற்று அடிப்படையில் (பந்தி OB5 ஐ பார்க்கவும்) மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் நியாயமான முறையில் செல்வாக்கு செலுத்தக்கூடியதாக இருக்கும் போதாகும், அவை குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்கள் பற்றிய நிதி தகவல்களை வழங்குகின்றது. வேறு விதமாக கூறுவதாயின், பொருண்மையானது, ஒரு தனிப்பட்ட உரிமத்தின் நிதியறிக்கையின் சூழலுடன் தொடர்புடைய தகவல்களுடனான உருப்படிகளின் தன்மை அல்லது பரப்பு, அல்லது இவையிரண்டையும் அடிப்படையாக கொண்ட உரிமம் சார்ந்த தோற்றமாகும்.

இதன் விளைவாக, சபையினால் பொருண்மைக்கு ஒரு சீரான அளவுடைய தொடக்க நிலையை குறிப்பிட முடியாது. அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் எது பொருண்மையானதாக அமையக்கூடும் என்பதை முன்னரே தீர்மானிக்க முடியாது.

## LKAS 10 அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகளிற்கான திருத்தங்கள்

பந்தி 21 திருத்தப்பட்டுள்ளது மற்றும் பந்தி 23C சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

### அறிக்கையிடும் காலத்திற்கு பின் ஏற்பட்ட செம்மையாக்கமற்ற நிகழ்வுகள்

**21 அறிக்கையிடும் காலத்தின்பின்னர் ஏற்பட்ட செம்மையாக்கத்திற்குட்படாத நிகழ்வுகள் பொருண்மையானதாக அமையும்பொழுது அதன் வெளிக்காட்டாமை, குறிப்பிட்ட அறிக்கையில் உரிமங்கள் பற்றிய நிதி தகவல்களை வழங்கும் நிதியறிக்கைகளை அடிப்படையாக கொண்டு, குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமங்கள் பற்றிய நிதி தகவல்களை வழங்குகின்ற பொது பயன்பாட்டிற்கான நிதியறிக்கையின் மீது முதனிலை பயனர்களால் மேற்கொள்ளக்கூடிய தீர்மானங்களை சாதாரணமாக தாக்கத்தை ஏற்படுத்துவதை எதிர்பார்க்கக்கூடியதாக அமையும் பொழுதாகும். ஆகையால், ஒரு உரிமமானது கீழ்வருவனவற்றை அறிக்கையிடலுக்கு பின்னரான செம்மையாக்கம் அற்ற நிகழ்வுகளின் ஒவ்வொரு பொருண்மையான வகைக்கும் வெளிக்காட்ட வேண்டும்.**

**(a) நிகழ்வின் தன்மை, மற்றும்**

**(b) அதன் நிதித்தாக்கத்தின் மதிப்பிட அல்லது மதிப்பீட்டினை உருவாக்க முடியாமைக்கான கூற்று.**

…

### நடைமுறைக்கு வரும் திகதி

…

23C பொருண்மையின் வரைவிலக்கணம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. பந்தி 21 திருத்தியுள்ளது. .உரிமமொன்று அந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். உரிமமொன்று அந்த திருத்தங்களை LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்திகள் 5 மற்றும் 6 இல் உள்ள பொருண்மையின் வரைவிலக்கணத்தின் திருத்தங்களை பிரயோகிக்கும் பொழுது பிரயோகிக்கும்.

# LKAS 34 இடைக்கால நிதியறிக்கையிடலுக்கான திருத்தங்கள்

பந்தி 24 திருத்தப்பட்டுள்ளது மற்றும் பந்தி 58 சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

பொருண்மை

…

24 ~~LKAS 1 மற்றும் LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் திருத்தங்கள், ஒரு உருப்படி பொருண்மையானதாயின், அதன் தவறுகை அல்லது தவறாக மதிப்பிடல், நிதியறிக்கையின் பயனர்களின் பொருளாதார தீர்மானங்களின்மீது தாக்கத்தை~~ ஏற்படுத்தக்கூடியதாக அமையும்பொழுதாகும். ~~LKAS 1~~ இன் **தகவல்** மற்றும் பொருண்மையான உருப்படிக்கு வேறுபட்ட வெளிக்காட்டல்களை தேவையாக்குகிறது, (உதாரணமாக) நிறுத்தப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியது. மற்றும் LKAS 8 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் வழுக்களின் திருத்தங்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளிலுள்ள மாற்றங்களின் வெளிக்காட்டல்களை தேவையாக்குகிறது. இந்த இரண்டு நியமங்களும் பொருண்மையின் அளவிடையான வழிக்காட்டல்களை உள்ளடக்கவில்லை.

## நடைமுறைக்கு வரும் திகதி

…

58 பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. பந்தி 21 திருத்தியுள்ளது. .உரிமமொன்று அந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். உரிமமொன்று அந்த திருத்தங்களை LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்திகள் 5 மற்றும் 6 இல் உள்ள பொருண்மையின் வரைவிலக்கணத்தின் திருத்தங்களை பிரயோகிக்கும் பொழுது பிரயோகிக்கும்.

# LKAS 37 ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்களிற்கான திருத்தங்கள்

பந்தி 75 திருத்தப்பட்டுள்ளது மற்றும் பந்தி 104 சேர்க்கப்பட்டுள்ளது. புதிய உரையின் கீழ் கோடிடப்பட்டுள்ளது மற்றும் நீக்கப்பட்ட உரையின் மேல் கீறிடப்பட்டுள்ளது.

### மீள் கட்டமைப்பு

…

**75** அறிக்கையிடும் கால முடிவிற்கு முன்னர் ஒரு முகாமை அல்லது சபையின் மீள் கட்டமைப்பு தீர்மானம் மேற்கொள்ளப்படுமாயின், அவ் உரிமமானது அறிக்கையிடும் காலத்தின் முடிவிற்கு முன்னரே,

(a) மீள்கட்டமைப்பு திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை ஆரம்பித்திருப்பின், அல்லது

(b) உரிமமானது, மீள்கட்டமைப்பை ஏற்படுத்தும் என்ற உறுதியான எதிர்பார்ப்பை அதிகரிப்பதற்காக அதில் போதியளவு குறித்த ஒரு முறையில் பாதிக்கப்பட்டவர்களிற்கு மீள்கட்டமைப்பு திட்டத்தின் முக்கிய அம்சங்களை வெளிப்படுத்தியிருப்பின்

அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் ஆக்கபூர்வக்கடப்பாட்டில் அதிகரிப்பை ஏற்படுத்துவது அதிகரித்திருக்காது.

உரிமமொன்று மீள்கட்டமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருப்பின், அல்லது அதன் முக்கிய அம்சங்களை பாதிக்கப்பட்டவர்களிற்கு அறிவித்திருப்பின் அறிக்கையிடும் காலத்திற்கு பின்னர் மாத்திரம், மீள் கட்டமைப்பு பொருண்மையானதாக மற்றும் வெளிக்காட்டாமை, குறிப்பிட்ட அறிக்கையிடும் உரிமத்தின் நிதி தகவல்ளை வழங்கும் நிதியறிக்கைகளினை அடிப்படையாக கொண்டு பொது பயன்பாட்டிற்கான நிதியறிக்கைகளின் மீது அதன் முதனிலை பயனர்களால் மேற்கொள்ளும் தீர்மானங்ளை சாதாரணமான வகையில் பாதிப்பதை எதிர்பார்க்கக்கூடிய மீள்கட்டமைப்பு பொருண்மையானதாகவும், அதன் வெளிக்காட்டலை LKAS 10- நிதியறிக்கையிடலுக்கு பின்னரான நிகழ்வுகளின் கீழ் தேவையாக்குகின்றது.

## நடைமுறைக்கு வரும் திகதி

104 பொருண்மையின் வரைவிலக்கனம்; (LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்) 2018 நவம்பரில் வெளியிடப்பட்டது. பந்தி 21 திருத்தியுள்ளது. .உரிமமொன்று அந்த திருத்தங்களை, 2020 ஜனவரி 1ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த காலங்களிற்கு பிரயோகிக்கும் முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இந்த திருத்தத்தை முந்திய காலமொன்றிற்கு பிரயோகிக்கும் பட்சத்தில் அந்த உண்மை வெளிக்காட்டப்படும். உரிமமொன்று அந்த திருத்தங்களை LKAS 1 இன் பந்தி 7 மற்றும் LKAS 8 இன் பந்திகள் 5 மற்றும் 6 இல் உள்ள பொருண்மையின் வரைவிலக்கணத்தின் திருத்தங்களை பிரயோகிக்கும் பொழுது பிரயோகிக்கும்.